Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04

விலை ரூபா: 3-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஆடி மீ 30 ஆம் உ புதன்கிழமை (15 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 23 ஓசை 178

## வவுனியா தமிழ் மாணவர் பரீட்சைக்கு செல்லவில்லை

(வவுனியா)

வவுனியாவில் க. பொ. த.உயர்தரப் பரீட்சையை நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தபோதிலும் தமிழ் மாணவர்கள் எவரும் மேற்படி பரீட்சையில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா அரசாங்க அதிபர் ரட்னாயக்காவினாலும், இராணுவ அதிகாரிகளினாலும் குறிப்பிட்ட பரீட்சையை நடாத்துவதற் (4 ஆம் பக்கம் பார்க்க)

# 'பகல்வெளிச்சம்' போட்டு இப்பொழுது இரவில் குடாநாட்டைத் தாக்கும் விமானப் படை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டின்மீது ஆறு தினங்களாக இரவு பகலாக சிறிலங்கா விமானப்படை நடத்திய கடும் தாக்குதலில் உயிர்களையும்பெருமளவுஉடைமைகளையும் அழித்து இரண்டு தினங்கள் பகலில் சற்று ஓய்ந்திருந்தபின் கடந்த இரு தினங்களாக நள்ளிரவிலும் முன்னிரவிலும் போர் விமானங்களும் ஹெலிக்கொப்ரர்களும் குடிமக்கள் வாழும் பகுதிகளில் குண்டு வீசித் தாக்கியும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் அட்டகாசம் செய்யத் தொடங்கியுள்ளன.

நேற்று முன்தினம் திங்கட் (4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் தமிழ் அகதிகள் பட்டினி; அரசு புறக்கணிப்பு!

## பாதகமான நிலையை ஏற்படுத்த வேண்டாம்

### மொஹமட் அறிவுரை

(கொழும்பு)

உணர்ச்சிகளைப் பகிரங்கமாக வெளிப்படுத்தும் வகையில் அறிக்கைகளை விடுவதனால் தற்போதைய நெருக்கடி நிலைமை மேலும் மோசமடைவதுடன், பாதகமான நிலைமைகளே உருவாக வழிவகுக்கும் என்று சபாநாயகர் எம்.எச். மொஹமட் (4ஆம் பக்கம் பார்க்க)

## சிறுமுகாம்களை மூடி ஒரே இடத்தில் குவிக்கும்ராணுவத்தின் நடவடிக்கை

(திருமலை)

திருமலையில் உள்ள தமிழ் அகதி முகாம்களுக்கு அரசாங்கத்தினாலும், பொது நிறுவனங்களினாலும் எந்தவிதமான உதவியும் வழங்கப்படாமையினால் தமிழ் அகதிகள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேவேளை இராணுவத்தினரதும், ஊர்காவற்படையினரதும் அட்டகாசத்தினால் முகாமிற்கு வெளியில் உணவு தேடிச் செல்ல முடியாத பரிதாப நிலையில் பட்டினிச்சாவை தமிழர்கள் எதிர்நோக்கியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் சிறிதாக இருந்த அகதி முகாம்களை ஒன்றாக இணைக்கும் இராணுவத்தினர் தமிழ் அகதிகளை ஓர் பணயக் கைதிகள்நிலையில்வைத்திருப்பதாகவும், அடிக்கடி முகாம்கள் சுற்றிவளைக்கப்பட்டு அகதிகள் கைது செய்யப்பட்டு முகாமிற்குக்கொண்டுசெல்லப்படுவதாகவும் செய்திகள்குறிப்பிடுகின்றன.

புதிதாகத் தமிழர் அகதி முகாம்கள் தம்பலகாமம், கிண்ணியா, திருக்கோணமலைப் பட்டினம் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலேயே (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழரின் அவலம் வெந்தணலாகச் சுடுகிறது

### -கருணாநிதி

(சென்னை)

''தமிழகத்திற்கு எழுபதாயிரத்துக்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் அகதிகளாக அல்லலுற்று வந்திருக்கும் கொடுமை வெந்தணலாகசுடுகிறது'' என்று தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி இந்தியாவின்44 வதுசுதந்திரதினத்தை ஒட்டி விடுத்துள்ள விசேட செய்தியில் தெரிவித்துள்ளார்.

## அகதி முகாமில் வைத்து மூன்று தமிழர் கைது

(திருக்கோணமலை)

தம்பலகாமம் அகதிமுகாமில் வைத்து, க. முத்துக்குமாரு, பாலகிருஷ்ணன், கோபால் ஆகிய மூவரும் சிறி (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகளின் பாதுகாப்பு பற்றிக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் பாதுகாப்புப் பற்றியும், க. பொ. த. சாதாரண தரப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி 31 பற்றியும் மற்றும் வேறு சில விடயங்கள் பற்றியுமான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு நல்லூர் ஸ்தான சீ. சீ. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 4 இராணுவம் பலி

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் நேற்று ஏற்பட்ட புலிகள் - இராணுவம் மோதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக பி. பி. ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

## மாந்தையில் ஏற்பட்ட மோதலில் ஒருஇராணுவம்பலி; 8பேர்காயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மாந்தைச் சந்திக்கருகில் ஏற்பட்ட மோதலில் ஒரு அதிகாரி உட்பட ஒன்பது இராணுவத்தினர் காயமடைந்ததாகவும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வைத்தியசாலைபற்றிப்பேச ஐவர் குழு இன்று போகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கென ஐவர் கொண்ட குழு ஒன்று இன்று கொழும்பிற்குப் புறப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக் கச்சேரி விமானத்தாக்குதலில்சேதம்

(முல்லைத்தீவு)

ஸ்ரீலங்கா விமானப்படையால் கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலால் முல்லைத்தீவு கச்சேரி முற்றாகச் சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக கச்சேரி அலுவலகத்தை வேறிடத்தில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 10 முஸ்லிம்கள் உட்பட 11 பேர் கொலை

(வவுனியா)

வவுனியாவுக்கு வடக்கே இரு கிராமங்களில் இனந் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அரச அதிகாரிகளாக சிங்களவர்கள் நியமனம்

(வவுனியா)

வவுனியாவிலுள்ள முக்கிய அரச அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்களில் சிங்கள அதிகாரிகளை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அரசாங்கத்தின் இம்முயற்சியின் முதற்கட்டமாகவே இராணுவ இணைப்பதிகாரியாகச் செயற்பட்டுவந்த கேர்ணல் ரட்னாயக்கா வவுனியா அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

தற்போது வவுனியா உப அரசஅதிபராக முன்னாள் சிங்களப் பிரிவு உதவி அரசாங்க (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக் மீதான அமெரிக்க செயலுக்கு பாதுகாப்புச் சபையில் எதிர்ப்பு

(வாசிங்டன்)

ஈராக் மீது அமெரிக்கா எடுத்திருக்கும் தீவிர பொருளாதாரத்தடை நடவடிக்கைகளை ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபை உறுப்பு நாடுகளான பிரான்ஸ், கனடா, சோவியத்ரஷ்யா, மலேசியா ஆகிய நான்கு நாடுகளும் குறை கூறியுள்ளன. இந்நாடுகள் தீவிர பொருளாதாரத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

அதேதேளை தொடர்ந்தும் சவுதி அரேபியாவில் அமெரிக்காவின் இராணுவ பலம் அதிகரிக்கப்பட்டு வருகின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### மீரா வெளியீடுகள்

சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும், 1989ல் 1990ல் வெளிவந்த தரமான நாவல்கள். 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/-ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது. ஸ்ரீகாந்த்புத்தகசாலைநல்லூர் கோயில் முன்புறம், யாழ்ப்பாணம் R :- 577

### தவறிவிட்டது

சேனாதிராஜா குலேந்திரராஜா ஆகிய எனது அடையாள அட்டை, சாரதி அத்தாட்சிப்பத்திரம் (கொம்பியூட்டர் கார்ட்) இதர தஸ்தாவேஜுக்கள் உட்பட மணிபேர்சுடன்மானிப்பாய்இணுவில்வீதியில்தவறிவிட்டது இதை எடுத்தவர்கள் உடன் ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது இல. 10, செட்டித்தெரு நல்லூரில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம்வழங்கப்படும்.

தகவல்: சே. குலேந்திரன் R.578

### காணவில்லை

பெருமாள் நாகலிங்கம் ஆகிய எனது குடும்ப உணவு முத்திரை, பங்கீட்டு அட்டை மற்றும் எனது குழந்தைகளான ரகுநந்தனன், கோவர்த்தனன், மாதங்கி ஆகியோரது பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் ஆகியனவற்றை 13.8 90 காலையில் திருநெல்வேலியில் தவறவிட்டுவிட்டேன். இவற்றைக் கண்டெடுப்பவர்கள் ''ஈழநாதம்'' பணிமனையில் ஒப்படைக்கும்படி பணிவன்புடன்கேட்டுக்கொள்கிறேன். நன்றி R. 579


## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் கடந்த மாதம் 18ஆம் திகதியிலிருந்து 23ஆம் திகதிவரை நல்லூர் ஸ்தான சீ. சீ. த க. பாடசாலையிலும், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் முதலுதவிப்பயிற்சி பெற்றோருக்கான விசேட கூட்டம் ஒன்று நாளை 16 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு நல்லூர் ஸ்தான சீ. சீ. த. க பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ம

## பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல்

(பருத்தித்துறை)

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் ஏவப்படும் ஆட்லறி ஷெல்கள் தொடர்ந்தும் பருத்தித்துறை நகரப்பகுதியை அடுத்துள்ள பல கிராமங்களில் விழுந்து வெடித்து பல வீடுகளையும், பாரிய மரங்களையும், சேதப்படுத்தி வருவதனால் இப்பகுதி மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை விழுந்து வெடித்த ஆட்லறி ஷெல் குண்டு ஒன்று தும்பளை இலட்சுமணன் தோட்டத்திலுள்ள த.பாலசுப்பிரமணிய ஐயரின் வீட்டைப் பலத்த சேதமடையச் செய்துள்ளது. (25)

# கிராமங்களில் இருந்து வெளியேறஇராணுவம்தடை

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கிராமப்பகுதிகளில் உள்ள தமிழ்க் குடும்பங்கள் தமது பகுதிகளிலிருந்து வெளியேற எடுத்து வரும் முயற்சிகளுக்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

சடந்த சில நாட்களாக இராணுவத்தினரால் பல தமிழ் மக்கள் கைது செய்யப்படுவதும், கைது செய்யப்படுபவர்கள் மறைமுகமான முறையில் கொலை செய்யப்படுவதும் தெரிந்ததே,

ஆசிகுளம், கோமரசன் குளம், கல்லாண்ட குளம், எல்லப்பர் மருதங்குளம், கோவில்குளம். தச்சன்குளம், வெளிக்குளம், இறம்பைக் குளம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வரும் தமிழ்க் குடும்பங்களே இராணுவத்திலிருந்தும், ஊர்காவல்படையினரிலிருந்தும், சிங்களக் காடையர்களிடமிருந்தும் தப்பிக் கொள்ளும் நோக்குடன் மேற்படி பகுதிகளிலிருந்து வெளியேற முயற்சி எடுத்து வருகின்றனர்.

கடந்த ஒன்பதாம் திகதி வியாழக்கிழமை பல தமிழ் மக்கள் இராணுவத்தினரால் கைதாகி மறைமுகமான முறையில் சிங்களக் காட்டுப் பகுதியில் சுட்டுக் கொலை செய்யப்பட்டது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதை அடுத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தமிழ்க் கிராமங்களுக்கு மேற்படி பகுதியில் வசிக்கும் மக்கள் குடும்பம் குடும்பமாக வெளியேறி வர முயற்சி எடுத்தனர்.

தமிழ் மக்களின் இந்த முயற்சியை இராணுவம் தடை செய்துள்ளது. குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் பூந்தோட்டம் வந்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாமல் இருப்பதாகவும், கோவில் குளம் பகுதியில் காவல் அரணில் உள்ள இராணுவத்தினர் இதற்கான அனுமதியை வழங்க மறுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

# மேஜர் ஜேம்ஸுக்கு வீர அஞ்சலி

(வடமராட்சி)

அச்சுவேலியில் நிகழ்ந்த எதிர்பாராத சம்பவத்தால் வீரமரணமடைந்த மேஜர் ஜேம்ஸ் (உ. சி. ஸ்ரீதரன் வல்வெட்டித்துறை) அவர்களின் புகழுடம்பு நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் (வெள்ளிக்கிழமை) பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அச்சமயம் பெரும்தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டு மலர்கள் தூவியும், மலர் வளையங்கள் சாத்தியும் அஞ்சலி செலுத்தினர். வீதிகளெல்லாம் கறுப்புக் கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. புரட்சிக் கீதங்கள் முக்கிய இடங்களில் ஒலிபரப்பப்பட்டது.

மேஜர் ஜேம்ஸ் கைதடியில் வெடி விபத்தின் போது வீரமரணமடைந்த கப்டன் வாசுவின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மண்டலாபிஷேகம்

(மிருசுவில்)

மிருசுவில் - துர்க்காபுரம் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் உள்ள ஸ்ரீ ஞான துர்க்கா தேவஸ்தான மண்டாலபிஷேகப் பூர்த்தி இன்று புதன் கிழமை நடைபெறும். 1008 சங்காபிஷேகமும் மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைக்கு பிள்ளைகளை கட்டாயம் அனுப்ப வேண்டும்

(கொழும்பு)

பாடசாலைகளுக்கு பிள்ளைகளை பெற்றோர் கட்டாயம் அனுப்ப வேண்டும் என்ற பொதுத்திட்டம் ஒன்று கல்வியமைச்சால் அமுல் செய்யப்படவுள்ளது.

சில பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியை இடையில் நிறுத்தி விடுவதாலும், சிலர் பாடசாலைக்கு அனுப்பாமல் வேலைகளுக்கு அனுப்புவதாலும் இந்தத் திட்டம் கொண்டு வரப்படவுள்ளது என கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறியுள்ளார்.

## நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது

(கொழும்புத்துறை)

திருக்கோணமலையில் இருந்து இடம் பெயர்ந்து முல்லைத்தீவுக்கு வந்துசேரும் சகல அகதிகளுக்கும் நோய்த் தடுப்பூசி போடும் வேலைகள் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (24)

## கடற்படைதாக்குதலால் மீனவர் பாதிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப்பகுதி கடலில் இருந்து ஸ்ரீலங்கா கடற்படையினர் தொடர்ந்தும் அடிக்கடி பீரங்கித்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்ல அஞ்சிவருவதுடன் பலத்தஇன்னல்களையும் அனுபவித்து வருகின்றனர் (25)


## பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ். அலுவலகம்

இப்போது இடம்பெயர்ந்திருப்பதனால் வெவ்வெறு அலுவலகங்களில் தமது வருகையைப் பதிவு செய்கின்ற யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சிச் சேவை ஊழியர்கள் அனைவரும் இன்று முதல் தத்தமது நிரந்தர அலுவலகங்களுக்குச் சென்று தமது தினசரிவருகையைப் பதிவுசெய்தல் வேண்டும் எனவும் எக்காரணம் கொண்டும் தற்காலிக இடங்களில் தொடர்ந்தும் கையொப்பமிடலாகாது எனவும் கேட்டுக் கொள்கின்றேன். இதனால் ஏதாவது கஷ்டங்கள் இருப்போர் என்னுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

சு. டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம். 13-8-90

(B 1325)


## ஜே. வி. பியினர் இருவர் கைது

(கொழும்பு)

ஜே. வி. பி. இயக்கத்தின் இராணுவ பிரிவு தலைவர்களில் இருவர் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

அளுத்கம, தெஹிவளை ஆகிய பகுதிகளுக்கு பொறுப்பான ஜே. வி. பி இராணுவ பிரிவு தலைவர்களே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

# ஆஸ்பத்திரி வளவினுள்மிதிவெடி இளம் பெண் படுகாயம்

(கிளிநொச்சி)

தனியார் ஆஸ்பத்திரி வளவினுள் ஸ்ரீலங்கா இராணுவம் புதைத்து வைத்த மிதி வெடியில் சிக்கிய இளம் பெண் ஒருவர் பலத்த காயமடைந்து மானிப்பாய் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி நகரில் உள்ள பாரதி கிளினிக் என்ற தனியார் வைத்தியசாலை வளவினுள் இராணுவம் மிதி வெடியைப் புதைத்து விட்டுச் சென்றுவிட்டது.

இந்த ஆஸ்பத்திரி டாக்டரின் சகோதரி இங்கு நடமாடியபோது மிதிவெடியில் அகப்பட்டு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

காயமடைந்த இப்பெண் மணி முதலில் உருத்திரபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் அம்புலன்ஸ் வாகன வசதியின்றி தனியார் வாகனம் மூலம் மானிப்பாய் கொண்டு செல்லப்பட்டார்.

## சர்வகட்சி மாநாடு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸ சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களின் அபிப்பிராயங்களைக் கண்டறிய, அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பு, சர்வசனவாக்கெடுப்பு, முஸ்லிம்களுக்கு தனியாக மாகாணசபை தேவையா போன்ற விடயங்கள் குறித்து சர்வகட்சி மாநாட்டில் ஆராயும் பொருட்டே அவர் இவ்வாறு தொடர்பு கொண்டுள்ளார்.

## மௌன ஊர்வலம்

(கொழும்புத்துறை)

தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்தக் கோரியும், அவர்களின் பாதுகாப்பை வலியுறுத்தியும் தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் மௌன ஊர்வலம் ஒன்றை இன்று நடத்துகிறது.

இந்த மௌன ஊர்வலம் கொழும்புத்துறையில் இருந்து ஆரம்பமாகி தியாகி திலீபனின் நினைவுத்தூபியில் வந்து முடிவடைகிறது. (24)

## பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் தேர்த் திருவிழாவையொட்டி, சப்த தீவக திவ்விய ஜீவன சங்க சமாஜத்தினரால், நயினை நல்லூர் பஜனைப் பாதயாத்திரை எதிர் வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாக இருக்கிறது.

நயினை நாகபூஷணி அம்மன் கோயிலில் இருந்து ஆரம்பமாகும் இப்பாத யாத்திரை குறிகட்டுவான், புங்குடுதீவு, வேலணை அராலி ஊடாக நல்லூரை வந்தடையும்.

## கால் நடைகள் வைத்திருப்போர் கவனத்துக்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கால் நடைகள் வைத்திருப்பவர்கள், உடனடியாக அவ்வப் பகுதிகளிலுள்ள கமநல சேவைகள் நிலையத்தில் பதிவு செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

உழவு மாடுகள், வண்டிமாடுகள், பசு மாடுகள், கலப்பைகள் வைத்திருப்போர் அவசர காலநிலைமையைக் கவனத்தில் கொண்டு, தாமதிக்காமல் பதிவு செய்து கொள்ளும் படியும், ஏனைய மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ளோருக்கும் இந்நடவடிக்கை அமையும் என்றும் தமிழீழ ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

## இறந்தோர் குடும்பங்களுக்கு 50,000 ரூபா

(மட்டக்களப்பு)

ஏறாவூரில் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் குடும்பங்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபா வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சர்கள், அதிகாரிகள், அஸ்வர், ஜோண் அமரதுங்க ஆகியோர் ஏறாவூர் பகுதிக்கு விஜயம் செய்தனர்.

## மாதகல் கடலில் கடற்படை

(பண்டத்தரிப்பு)

மாதகல், கீரிமலை கடற் பகுதியில் கடற்படைக்கப்பல்களின் நடமாட்டம் தற்போது அதிகரித்துள்ளதுடன் இடையிடையே பீரங்கித்தாக்குதல்கள் பெரும் சத்தத்துடன் நடத்தப்படுகிறது.

## கப்பல் இன்று வரலாம்

இன்று புதன்கிழமை கப்பலொன்று உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறைக்கு வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகின்றது. பருத்தித்துறைக்கு உணவுப்பொருட்களுடன் வரும் நாலாவது கப்பல் இதுவாகும்.

இங்கு வரும் கப்பல்களிலிருந்து பொருட்களை இறக்கும் வேலைகளைப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் பொறுப்பேற்று மேற்கொண்டு வருகின்றது.

பொருட்களைத் துரிதமாக இறக்கி முடிப்பதற்கு டீசல் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக இருப்பதாக பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. காந்திதாஸன் தெரிவித்தார். (25)

## அலுவலகம் மாற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இயங்கி வந்த தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகத்தின் தலைமைபலுவலகம் தற்போதுசாவகச்சேரிஇந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது. இடம் பெயர்ந்த அகதிகள் தொடர்பான சகல நடவடிக்கைகளும், இவ்வலுவலகத்தினூடாகவேமேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.


உங்களுக்குத் தேவயைான விறகுகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
நியாய விலையில்பெற்றுக் கொள்ளலாம்

**சிவன் விறகு காலை**

கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை.

### சிந்தனைக்கு

''திருடனே நில்'' என்று முதலில் கூக்குரல் எழுப்புபவனே பல வேளைகளில, சொத்தைத் திருடியவனாவான்.

- *வில்லியம் காங்ரீங்*





*31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 15-08-90*
*தொலைபேசி*
*ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208*
*த. பெ. எண் 05*


# அரசின் உண்மைச் சொரூபம்

கிழக்கு மாகாணத்தில் காத்தான்குடியிலும், ஏறாவூரிலும் கடந்த வாரம் நடந்த இருவேறு சம்பவங்களில் முன்னூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

முஸ்லிம் மக்களின் இக்கொலைகள் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகள்மீது குற்றம் சாட்டியுள்ள அதேவேளை விடுதலைப்புலிகள் திட்டவட்டமாக அதை மறுத்துள்ளதோடு, அரபு நாடுகளிடம் இருந்து ஆயுதம் பெறுவதற்காகவும், தமிழர் முஸ்லிம்களுக்கு இடையில் உள்ள ஒற்றுமையைச் சீர்குலைக்கவும் திட்டமிட்டு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட செயல் இதுவென்றும் தெரிவித்து உள்ளனர்.

இவ்விடயத்தை சற்று ஆழ்ந்து நோக்கினால் புலிகள் மீதான அரசாங்கத்தின் இக்குற்றச்சாட்டில் உள்ள குழப்பமான தன்மை தெளிவாகத் தெரியவரும். இம்முறை விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் போர் தொடங்கி மூன்றுவாரங்களின் பின்னர் கிழக்கு மாகாணம் தனது பூரண கட்டுப்பாட்டில் வந்துவிட்டது என சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்து அறிவித்து வந்ததோடு இனி வடக்கில்தான் இராணுவ நடவடிக்கை கிழக்கில் முடிந்து விட்டது எனவும் அறிவித்தது. அவ்வாறாயின் ஏறாவூர்ப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தாக்குவதற்கு நூற்றுக்கணக்கில் புலிகளிடம் ஆட்பலம் எங்கிருந்து வந்தது?

முஸ்லிம்களின் கொலைகள் இடம்பெற்ற காத்தான்குடி, ஏறாவூர் ஆகிய இருபகுதிகளும் ஒதுக்குப்புறமான காடுகளை அண்மித்த கிராமங்கள் அல்ல. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சனநெரிசலான நகர்ப்பகுதிகள் ஆகும். அத்தோடு இப்பகுதிகளில் சிறிலங்காப் படையினர் நிலைகொண்டும் உள்ளனர்.

இவ்வாறாயின் காட்டுக்குள் ஓடிவிட்ட விடுதலைப் புலிகளை தேடியழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறிலங்காப் படையினர் புலிகள் நகருக்குள் புகுந்து இருந்தபோது ஏன் தாக்கவில்லை? புகுந்தவர்கள் புலிகளல்ல. அதனால்தான் படையினர் அவர்கள்மீது தாக்குதல் நடத்தவில்லை. உண்மையில் புகுந்தவர்கள் புலிகளாயின் படையினர் கட்டாயம் தாக்குதல் நடத்தி இருப்பர்.

தாக்குதல் நடத்துவதற்குப் படையினருக்குச் சந்தர்ப்பம் (நேரம்) இல்லாமலும் இல்லை. ஏறாவூரில் தாக்குதலை நடத்தியவர்கள் இரவு 9 மணிக்கு வந்து ஊரைச்சுற்றிவளைத்து, அதிகாலை நான்கு மணிவரையும், ஏறத்தாழ 7 மணித்தியாலம் அப்பகுதியில் நின்று தாக்குதல் நடத்தியதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களே தெரிவிக்கின்றன.

மேலும் சிறிலங்காவின் ஜனாதிபதியும், முப்படைகளின் தளபதியுமான பிரேமதாஸாவும், பாதுகாப்பு இணைஅமைச்சரான ரஞ்சன் விஜேரட்னாவும் காத்தான்குடிச் சம்பவத்திற்குப் பிறகு முஸ்லிம்களைப் பாதுகாக்கும்படி கண்டிப்பான உத்தரவு தமது ஆயுதப் படையினருக்கு இட்டிருந்தார்கள்.

இவ்விடயம் தொடர்பாகப் பாராளுமன்றத்தில் அமைச்சர் ரஞ்சன்விஜேரட்னா பேசும்போது, காத்தான்குடி சம்பவம் போன்று இன்னுமோர் சம்பவம் நிகழ்ந்தால் அப்பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள இராணுவ அதிகாரிகள் வீட்டிற்கு அனுப்பப்படுவர் எனத் தெரிவித்திருந்தார். ஆனால் ஏறாவூர்ச் சம்பவத்தில் இராணுவம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்காத இராணுவத்தினர் மீது அரசாங்கமும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. ஏன்?

இதிலிருந்து சிறிலங்கா அரசாங்கத்தின் உண்மைச் சொரூபம் வெளிப்படுகின்றது.

சிறிலங்கா அரசாங்கத்திற்கு கொலைகள் புதியதல்ல. தனது ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக ஜே. வி. பி. இயக்கத்தினரைச் சார்ந்தவர்கள் எனக் கருதிய முப்பதாயிரம் சிங்கள மக்களைத் தனது கொலைகாரப் படையைக்கொண்டு (பச்சைப் புலிகள்) கொன்றுகுவித்தது தெரிந்ததே.

# வளைகுடா வரும் கப்பல்களை அமெரிக்கா தடுத்து நிறுத்தும்

(வாஷிங்டன்)

ஈராக் மீதான ஐக்கிய நாடுகள் பொருளாதாரத் தடையை மீறி வளைகுடாவில் செல்லும் கப்பல்கள் தடுத்து நிறுத்தப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதற்கான உத்தரவை அமெரிக்கா வளைகுடாவில் உள்ள தனது கடற்படைக் கப்பல்களுக்கு விடுத்துள்ளது.

இதேபோல பிரிட்டனும் வளைகுடாவில் நிலைகொண்டுள்ள தனது கடற்படைக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இக்கப்பல்கள் வழிமறிக்கப்பட்டு அமெரிக்க கடற்படையால் சோதனையிடப்படும் எனவும், இதற்கு சட்டபூர்வமாக அனுமதி கிடைத்துள்ளது எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதன்படி வளைகுடா பகுதியில் ஈராக்கில் இருந்து எண்ணெய் ஏற்றிவரச் செல்லும் கப்பல்களும் அங்கிருந்து வரும் கப்பல்களும் தடுத்து நிறுத்தப்படும்.

இதேவேளை பெல்ஜியம் மூன்று கடற்படை கப்பல்களை வளைகுடா பகுதிக்கு அனுப்பியுள்ளது.

ஈராக்கிய நிபந்தனையை

## பாலஸ்தீன விடுதலை இயக்கம் வரவேற்றுள்ளது

(பாக்தாத்)

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் வெளியிட்ட நிபந்தனைகள் ஆக்கபூர்வமானவை என்றும், நடைமுறைக்கு உகந்தவை என்றும் கூறிய பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் இந் நிபந்தனைகளை வரவேற்றுள்ளது.

இந் நிபந்தனைகளானது மத்திய கிழக்கு நாடுகளுக்கு பாதுகாப்புக் குறித்து உறுதி வழங்குவதாக அமைகிறது என்றும் கூறியிருக்கிறது.

இதேவேளை ஜோர்டானிய ஜனாதிபதி விடுத்துள்ள செய்தியில் மேலைத்தேச நாடுகள் வளைகுடாவில் கொந்தளிப்பு நிலையை வைத்திருக்க விரும்புகின்றனவென்றும் அதன் மூலம் இந்நாடுகள் மீது தமது கண்காணிப்பை மேற்கொள்ள எண்ணங் கொண்டிருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டவர் பயணம்

(அம்மான்

ஈராக்கில் உள்ள வெளிநாட்டவர்கள் ஜோர்தான் ஊடாக அம்மான் நோக்கி வாகனங்களில் வந்து கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் தரைமார்க்கமாக இங்கு வந்து அங்கிருந்து விமான மூலம் தத்தமது நாடுகளுக்குச்செல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

## குஜ்ரால் சோவியத்பயணம்

(புதுடில்லி)

இந்திய வெளியுறவு அமைச்சர் இந்திர குமார் குஜ்ரால் நேற்று திடீர் விஜயம் மேற்கொண்டு சோவியத் பயணமானார்.

வளை குடா நிலைமை தெற்காசிய பகுதியின் நிலைமை போன்ற விடயங்கள் தொடர்பாக சோவியத் தலைவர்களுடன்அவர் பேச்சு நடாத்துவார்.

## சவூதிக்கு பாகிஸ்தான் படை

(ராவல்பிண்டி)

சவூதி அரேபியாவின் வேண்டுகோளையடுத்துபாகிஸ்தான் தனது இராணுவ அணியை சவூதி அரேபியாவுக்கு அனுப்ப முடிவுசெய்துள்ளது.

## திருமதிபூட்டோஆதரவாளர் பலர் பாகிஸ்தானில் கைது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான்முன்னாள்பிரதமர்திருமதிபெனாசிர்பூட்டோவில் கணவரின் நண்பர்கள் ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அரசுக்கு விரோதமான உளவு வேலைகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப் பட்டுள்ளனர்.

மேலும் பன்னிரண்டு பேர் வரை கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

திருமதி பெனாசிர்பூட்டோ ஆட்சியின் போது உயர் பதவிகளில் இருந்த சிலரும் கைதாகியுள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என புதிய தகவல் அமைச்சர் அறிவித்துள்ளார்.

## பிரிட்டிஸ் பிரஜை சுட்டுக் கொலை

(பாக்தாத்)

பிரிட்டிஷ் பிரஜை ஒருவர் ஈராக் துருப்புக்களினால் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவித்தன இவர் ஈராக்கில் இருந்து தப்பி ஓடும்போது இச்சம்பவம் இடம் பெற்றது.

இது குறித்து பிரிட்டிஷ் அரசு ஈராக் அரசிடம் தனது ஆட்சேபனையை தெரிவித்துள்ளது.

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(சென்னை)

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அலுவலகம் தமக்கே தரப்பட வேண்டும் எனக்கோரி நேற்று முன்தினம் தொடர் உண்ணா விரதத்தை மேற்கொண்ட எஸ். திருநாவுக்கரசுவும் அவரின் ஆதரவாளர்களும் உண்ணாவிரதத்தை நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

தமிழ்நாடு பொலிசார் இது தொடர்பாக வழக்கு மேற்கொள்ளவிருப்பதாக தம்மிடம் அறிவித்ததைத் தொடர்ந்தே உண்ணாவிரதத்தை நிறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# பரந்தனில் ஹெலித் தாக்குதல்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம், குஞ்சுப் பரந்தன், பரந்தன் பகுதிகளில் திங்கட்கிழமை காலை ஹெலிகப்டரில் இருந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

வீதியால் சென்ற வாகனங்கள் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டதால் இரு வாகனங்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

மாங்குளத்திலும் நேற்று முன்தினம் ஹெலிகப்டர் மூலம் தாக்குதல் நடாத்தப்பட்டதால் மீன்வியாபாரியும் இரு பெண்களும் காயமடைந்தனர்.

முல்லைத்தீவு பகுதியிலும் இதே தினம் ஹெலியிலிருந்து தாக்குதல்கள் நடாத்தப்பட்டதால் சிலர் காயமடைந்தனர்.

## மினிபஸ் சங்கக் கூட்டம்

(நல்லூர்)

வவுனியா, இயக்கச்சி, கேரதீவுக்கு அப்பால் செல்லும் சகல மினிபஸ் உரிமையாளர்களையும் நாளை வியாழக்கிழமை காலை 11-00மணிக்கு முத்திரைச்சந்தியிலுள்ள கல்விக்கந்தோரில் அமைந்துள்ள பாடசாலைக்கு வருமாறு வட பிராந்திய மினிபஸ் சங்கம் கேட்டுள்ளது.

இக் கூட்டத்திற்கு வரத் தவறும் மினிபஸ் உரிமையாளர்களுக்கு 'ரேன்' வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயிலுநர் ஆசிரியர் சங்கம் நிவாரண உதவி

(பருத்தித்துறை)

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறைக்கு வந்து தஞ்சமடைந்துள்ள திருக்கோணமலை பயிலுநர் ஆசிரியர் குடும்பங்களுக்கும், புலோலியில் தஞ்சமடைந்துள்ள அகதிகள் குடும்பங்களுக்கும் கடந்த சனிக்கிழமை வடமராட்சி பயிலுநர் ஆசிரியர் சங்கம் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளது.

இதுவரை பயிலுநர் ஆசிரியர் சங்கம் சுமார் 350 அகதிகளுக்கு உணவு, உடைகளை வழங்கியுள்ளது. மேலும் இப் பயிலுநர் ஆசிரியர் சங்கம் அகதிகளுக்கான உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. (25)

## றொட்டிக் கடை கொள்ளை

(பருத்தித்துறை)

புலோலி, மந்திகைச் சந்தைக்கு முன்னால் உள்ள றொட்டிச்சாலை கடந்த சனிக்கிழமை உடைக்கப்பட்டு அங்கிருந்த உணவுப் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இந்த றொட்டிச் சாலைக்கு அருகில் இருந்த கணேஸ் சில்லறை விற்பனை நிலையத்தின் கூரை பிரிக்கப்பட்டிருந்தபோதும் கொள்ளையரின் கொள்ளை வெற்றியளிக்கவில்லையாம்.

புலோலிப் பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வரும் இக்கொள்ளைச் சம்பவங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

## இன்று கைலாச வாகனம்

(கொழும்புத்துறை)

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் இருபதாம் திருவிழா சந்தான கோபாலர் உற்சவம் இன்று புதன் கிழமை காலை ஏழு மணிக்கும், கைலாசவாகனம் மாலை ஐந்து மணிக்கும் நடைபெறும். (24)

# ஹொறவப்பத்தான காட்டில் மூன்று பிரிவாக நிறுத்திச் சுட்டுத் தள்ளியது இராணுவம்

## தப்பிவந்த பூவான் கணேசன் கூறும் தகவல்

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தால் இம்மாதம் 9ஆம் திகதி வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட பதினைந்து தமிழர்களும் ஹொறவப்பத்தானை வீதி, ஒன்பதாம் கட்டை காட்டுப்பகுதியில் வைத்து கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்களுடன் இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்ட பூவான் கணேசன் என்பவர் இரவு நேரமாதலால் அங்கிருந்து தப்பிவந்து ஈழநாதம் நிருபருக்கு இச் சம்பவம்பற்றிக் கூறியுள்ளார்.

வவுனியா கோவில்குளம் இராணுவ காவல் அரணில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டு இங்குள்ள சண்முகம் செல்வராசா என்பவரது அரிசி ஆலைக்குள் அழைத்துச்செல்லப்பட்டனர்.

அனைவரின் கண்களும் கைகளும் துணியினால் கட்டப்பட்டன. பலமாகத் தாக்கப்பட்டனர். இரவு வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு ஹொறவப்பத்தானை காட்டுப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு மூன்று குழுவாக நிறுத்தப்பட்டனர்.

இவர்களில் ஒருவரின் கட்டு அவிழ்ந்துவிட்டதால் அவர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிலரின் கட்டுகளை அவிழ்த்துவிட்டார். அவ்வாறு எனது கட்டும் அவிழ்க்கப்பட்டது. இதைப் பயன்படுத்தி இரவு நேரமானதால் தான் தப்பி வந்ததாக பூவான் கணேசன் கூறினார்.

முதல் குழுவும் இரண்டாம் குழுவும் வரிசையாக நிறுத்தப்பட்டு தன் கண்முன்னால் துடிக்கத் துடிக்க சுட்டுக் கொல்லப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தான் தப்பியோடியதாகவும் பின்னர் காட்டுப் பாதைகளினூடாக சிங்கள கிராமங்களுக்கு மத்தியில் சத்தமின்றி கோவில்குளம் பகுதிக்கு வந்து இதனைத் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இச் சம்பவத்தில் ஒருபெண் உட்பட பதினைந்துபேர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டனர்.

இராமசாமி தர்மலிங்கம் (36) கணேசபுரம், அருணாசலம் ஆனந்தராசா (26) சமளக்குளம், பிரபாகரன் (22) தச்சன்குளம், குமாரி (23) இவரது சகோதரர் குமார் (30), கனகசபை மகேந்திரன் (35) கோழியகுளம், தங்கராசா (45), பூவான் நாகேந்திரன் (21) (தப்பி வந்தவரின் சகோதரர்) உட்பட மொத்தம் பதினைந்துபேர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களிடமிருந்த மோதிரம், பணம், கைக்கடிகாரம், சைக்கிள்கள் என்பன படையினரால் அபகரிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவத்தையடுத்து வவுனியா பகுதியில் பெரும் பீதி நிலவுவதுடன் கோவில்குளம் அரண்பகுதிக்கு வர தமிழர்கள் அஞ்சுகின்றனர். (தி)

### 10 முஸ்லிம்கள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாதவர்கள் தாக்கியதில் 10 முஸ்லிம்கள், 1 சிங்களவர் உட்பட 11 பேர் உயிரிழந்ததாக பி. பி. ஸி. அறிவித்தது.

### மாந்தையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் இவர்களில் ஒருவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் மரணமடைந்ததாகவும் ஸ்ரீ லங்கா பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

### திருமலையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தம்பலகாமம் மேற்குக் கொலனி, 98 ஆம் கொலனி, 9ஆம் கொலனி, பாலம்போட்டாறு, புதுக்குடியிருப்பு, பாரதிபுரம் பகுதிகளைச்சேர்ந்தவர்கள் தம்பலகாமம் அகதி முகாமிலும்;

ஆலம்கேணி, ஈச்சம் தீவு, உப்பாறு, சுங்கான் குழி, பிள்ளைகொல்லிமணல், இடிமண் ஆகிய பகுதி மக்கள் கிண்ணியா அகதி முகாமிலும்

திருக்கோணமலைப் பட்டினம், கப்பல் துறை, விளாங்குளம் வெள்ளைமணல், சீனன்குடா ஆகிய பகுதி மக்கள் வெள்ளைமணல் பகுதியில் உள்ள விளப்பன்வாக்களஞ்சியக் கட்டடத்திலும் அகதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த முகாமில் மூதூர் பச்சைநூல் கிறிஸ்தவ தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த மக்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கந்தளாய் 2 ஆம் கொலனி, கோவில் கிராமம் ஆகிய பகுதி மக்களுக்கு கந்தளாய் பரமேஸ்வரா மகா வித்தியாலயத்தில்முகாம் அமைக்கப்பட்டுள்ளது. (மா)

## மட்டக்களப்பு மாவட்ட ஊழியரைசெப்ரம்பர்3க்குள் வேலைக்குத்திரும்ப பணிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது குறித்து உயர் மட்டக் கூட்டம் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இராணுவ பொலிஸ் மற்றும் அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

இம்மாவட்டத்தில் உள்ள ஒன்பது உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களை மீள இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அடுத்த மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் இங்குள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகங்களின் ஊழியர்கள் கடமைக்கு திரும்ப வேண்டும் எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது

இவ்வாறு வேலைக்கு சமுகம்தராதவர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டதாக கருதப்படுவார்கள்.

இந்த வெற்றிடங்களுக்கு போட்டி பரீட்சை மூலமாக புதியவர்களை நியமனம் செய்வது என்றும், மட்டக்களப்பு வாவியில் மீன்பிடிக்க அனுமதிப்பது எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இடம் பெயர்ந்தவர்கள் சொந்த இடங்களுக்கு திரும்பி வந்து தங்க வசதிகள் செய்வதுடன் ஆறுமாதகால உணவுப் பொருட்கள் வழங்கப்படும் எனவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

### பகல் வெளிச்சம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை இரவு நள்ளிரவுக்குப் பின் ஒன்றரை மணியளவில் திடீரெனத் தோன்றிய குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு பல தடவை வட்டமிட்டபின் கோட்டைப்பகுதியில் இரண்டு குண்டுகளை வீசிவிட்டு மீண்டும் குடாநாட்டின்மீது வட்டமிட்டது.

இதே சமயம் வானில் தோன்றிய ஹெலிக்கொப்ரர் ஒன்று பல தடவை வட்டமிட்டபின் பலாலிக்குச்சென்று திரும்பி வந்து ''வான வெளிச்சம்'' போட்டு நோட்டமிட்டது. நள்ளிரவிலிருந்து அதிகாலை மூன்று மணிவரை நீடித்த இந்த வான் படை நடவடிக்கையால் ஆழ்ந்த நித்திரைசெய்து கொண்டிருந்தவர்கள் குழந்தைகளையும் தூக்கிக்கொண்டுபதறித் துடித்துப் பதுங்கு குழிகளில் தஞ்சம் புகுந்து கொண்டனர்.

நேற்றுப் பகலில் ஹெலியும் போர் விமானங்களும் வானில் தோன்றாதது கண்டு சற்று நிம்மதியடைந்திருந்த யாழ்ப்பாண மக்கள் நேற்று இரவு எட்டுமணியளவில் ஹெலிக்கொப்ரரும் மற்றும் நான்கு போர் விமானங்களும் திடீரெனத் தோன்றி ''வான் வெளிச்சம் பரப்பி'' பல இடங்களிலும் குண்டு வீசியதுடன்ஹெலிக்கொப்ரர் பரவலாகத் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தது.

நகர் பகுதிகளிலிருந்து மக்கள் பலரும் கிராமப்புறங்களை நாடி நகர்ந்துள்ளதாலும் பதுங்கு குழிகளை நாடுவதாலும் உயிர்ச்சேதம் அதிகம் ஏற்படாமல் தவிர்க்கப்படுகிறது என்று சொல்ல வேண்டும்.

### வவுனியா தமிழ்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

ஈரற்பெரியகுளம் சிங்கள மகா வித்தியாலயத்தில் சிங்கள மாணவர்களுக்கான பரீட்சை நடைபெற்றது. பெருந்தொகையான சிங்கள மாணவர்கள் இதில் தோற்றினர்.

### வவுனியா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் பியசேனா நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியாவில் மேலும் பல சிங்கள அதிகாரிகளை நியமித்துத் தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசமான வவுனியா மாவட்டத்தைச் சிங்கள மயப்படுத்த அரசு முயற்சி எடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. (தி)

## குண்டு வீச்சு இல்லாததால் பக்தர்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

விமானப்படை விமானங்கள் யாழ்நகரின் மீது கடந்த இரண்டொரு நாட்களாக தாக்குதல் நடத்தாததை தொடர்ந்து நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு நேற்று பெருவாரியான மக்கள் சுவாமி தரிசனத்திற்காக வந்திருந்தனர்.

புதிதாக கடலை வியாபாரிகளும் மணிக் கடைக்காரர்களும் வந்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது யாழ்.மாநகரசபையும் நேற்று கோவில் வீதிகளை அண்டிய பகுதிகளில் வீதித்தடைகளை மீண்டும் ஆரம்பித்தனர்.

### முல்லைத்தீவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயங்கச் செய்வதற்கான முயற்சிகளை அரச அதிபர் எடுத்துள்ளார். இது பற்றி நேற்றுநடைபெற்ற உயர் அதிகாரிகளின் கூட்டத்தில்ஆலோசிக்கப்பட்டது. (மு)

### ஈராக்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் மீண்டும் அரபு நாடுகளின் உச்சி மகாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும் என யெமன் கேட்டுள்ளது. இந்நாடு ஈராக்கிற்குத் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

அடுத்து பாகிஸ்தான் சவுதி அரேபியாவுக்கு பாதுகாப்பாக தனது 5000 படை வீரர்களை அனுப்பும் நடவடிக்கைக்கும் பாகிஸ்தான் பத்திரிகைகள் பெரிதும் குறைகூறியுள்ளன.

### பாதகமான

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ள விஷேட செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த விஷேட செய்தியில் உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் அறிக்கைகள் வெளியிடுவோருக்கு எதிராகப் பகிரங்க எச்சரிக்கையினையும் விடுத்துள்ளதுடன்; இலங்கை இன்று நெருக்கடி மிக்க ஒரு கால கட்டத்தை எதிர்நோக்கியுள்ளது என்றும், நாம் எடுக்கும் எந்தவொரு நடவடிக்கையும் நாட்டினதும், மக்களினதும் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

### யாழ் வைத்தியசாலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படவுள்ளது.

பருத்தித்துறைத் துறைமுகத்திலிருந்து இன்று கொழும்பிற்குப் புறப்படும் 'சிகிரியா' கப்பலில் செல்லவுள்ள கலாநிதி செல்வி பி. சண்முகம் தலைமையிலான வைத்திய அதிகாரிகள் கொண்ட இக்குழுவினர் கொழும்பில் உள்ள அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகளையும், பாதுகாப்புச்சபை உறுப்பினர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர். (ம)

## பாதுகாப்பாக உள்ளனர்

குவைத்திலுள்ள இலங்கையர் அனைவரும் பாதுகாப்பாக உள்ளார்கள் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

### அகதி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஏழாம் திகதி இந்த முகாமுக்குள் சென்ற இராணுவத்தினர், தங்கியிருந்த அகதிகளை விசாரணை செய்த பின்னர் இந்த மூவரையும் கைது செய்து இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பாடசாலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகள், சகல கொத்தணி அதிபர்கள் கல்வித்திணைக்கள அதிகாரிகள் ஆகியோரை தவறாது இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணி சோமசுந்தரஸ்தபதி

திருமதி அன்னபூரணி சோமசுந்தரஸ்தபதி அவர்கள் 13 – 08 – 90 அன்று சிவபதம் எய்தினார். அன்னார் சோமசுந்தரஸ்தபதியின் அன்பு மனைவியும், கெங்காதரனின் அன்புத் தாயாரும், சொர்ணாம்பிகையின் மாமியாரும், பாலசுந்தரத்தின் அப்பம்மாவும், தமிழ்நாடு நாட்டரசங்கோட்டை திருமதி மரகதவள்ளி இராமச்சந்திரனின் அன்புச் சகோதரியும், தமிழ்நாடு நாகர்கோயில் திரு. திருமதி நடராஜன் ஆச்சாரியின் சம்பந்தியும், காலஞ்சென்ற கோண்டாவில் தங்கவேல் ஸ்தபதி இரத்தினம்மாவின் மைத்துனியும், இராமமூர்த்தி சந்திரசேகரனின் அத்தையும், கலா, ரமணன், யசோதாதேவி, உமையாள், ஞானகணேசன் (CANADA) சாந்தினி ஆகியோரின் அன்பு பெரியதாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கோண்டாவிலில் அவரது இல்லத்தில் 14 - 08 - 90 செவ்வாய்க்கிழமை நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கே. கே. எஸ் வீதி,
கோண்டாவில்.

தகவல்:
நா. சோமசுந்தரஸ்தபதி

(R/580)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.